**பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III - 2021**

---

பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென நான்கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் தகவல்களின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும்உள்ளன. கிருலப்பனையிலிருந்து கொழும்பு – ஹொரணை வீதிக்கு 860 மீற்றர்கள் நீளமானபுதிய வீதியொன்றை நிர்மாணிப்பதன் மூலம் வீதி போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். இவ் வீதி இரண்டு பக்கங்களிளும் எழுப்பிய நடைபாதையுடனான 3 லேன் இரட்டை வழிப்பாதையுடன் நிர்மனிக்கப்படும். இச்செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் காணி கொள்வனவிற்கான தற்காலிக மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 4இ860 மில்லியனாக உள்ளதுடன் நிர்மனத்திற்கான கிரயம் 5இ250 மில்லியனகும். இருப்பினும்இ செயற்திட்டத்தின் சிவில் நிர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் நிர்மானத்திற்கு தேவையான நிதி 2022 ஜுன் 30 இல் உள்ளவாறு கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

(அ) மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

(ஆ) சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

(இ) முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

(ஈ) வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ரூபா 57.64 மில்லியன் இழப்பீட்டுடன் தொடர்புபட்ட ரூபா 28.19 மில்லியன் தொகையான செலுத்தவேண்டிய வட்டி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமைக்கூற்றில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | 28.19 | இக் கருத்துரையுடன் உடன்பட்டனர். தற்போது இவ்விடுபாட்டினை திருத்த உரியநடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் ஏற்கனவே காட்டப்பட்டுள்ள ரூபா 57.64 மில்லியன் செலுத்தவேண்டிய இழப்பீட்டுடன் தொடர்புபட்ட ரூபா 28.19 மில்லியன் தொகையான வட்டியினை அடையாளப்படுத்தி பதிவு செய்யப்படல் வேண்டும். |

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மொத்த வீதி நீளம் 7.42 கி.மீ இனை செயற்திட்டத்தின் கிரயம் மற்றும் கொழும்பு பகுதியிலுள்ள போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குவதற்கான அதன் முக்கியத்துவத்தினையும் கருத்தில்கொண்டு 2009 ஆம் ஆண்டில் 6.56 கி.மீ தொடக்கம் 0.86 கி.மீ நீளத்தினால் குறைக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் வீதி நிர்மான நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வருடங்கள் கடந்த பின்னரும் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும்இ கூட்டுமொத்தம் ரூபா 3இ323 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே காணிகொள்வனவு கிரயம் மற்றும் பீஎம்யூ வின் கிரயம் என்பனவற்றிற்காக இலங்கை அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். பல்வேறு நிறுவனங்களின் தலையீடு மற்றும் சட்ட தேவைப்பாடுகள் என்பன காரணமாக காணி கொள்வனவு வேலைகளை பூர்த்திசெய்ய கணிசமான நேரத்தினை எடுத்திருந்தது. நிதியளிப்பானது காணி கொள்வனவு கொடுப்பனவிற்கான தாமதத்திற்கான பிரதான கட்டுப்பாடாக இருந்தது. எனவே சிவில் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் இருக்கக்கூடும். | செயற்திட்டத்தின் வீதி நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தகவல்களின் பிரகாரம்இ செயற்திட்டமானது 2021 ஆம் ஆண்டின் போது நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதற்காக ரூபா 625 மில்லியன் தொகையான ஜிஓஎஸ்எல் ஒதுக்கிட்டினை பெற்றிருந்தது. இருப்பினும் ஆரம்ப கட்டத்திலேயே ஒப்பந்தத்தினை கையளிக்க செயற்திட்டத்தினால் எவ்வித முறையான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>ஏலங்களுக்கான அழைப்பு 2021 ஒக்டோபர் 25 இல் அழைக்கப்பட்டிருந்ததுடன் ஏலங்களானது 2021 திசெம்பர் 02 வரை திறக்கப்பட்டிருந்தது. சிவில் நிர்மான வேலைகளிற்கான ஒப்பந்ததாரர்கள் 2022 மே 31 இல் உள்ளவாறு கூட தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபெறாகஇ மொத்த ஆரம்ப ஒதுக்கீட்டில்இ ரூபா 187 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மற்றொரு செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் மிகுதி ஒதுக்கீடு ரூபா 438 மில்லியன் செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளில் தாமதத்தின் காரணமாக பயன்படுத்தப்படாமல் செயற்திட்டத்தில் காணப்பட்டிருந்தது. | வருடாந்த ஒதுக்கீடு ரூபா 1இ074 மில்லியனிலிருந்து வருடத்தின் முதல் 2 காலாண்டுகளில் பெறப்பட்ட காணி கொள்வனவு வேலைகளிற்கான தேவையான கட்டு நிதியினை மேற்கொண்டு சிவில் வேலை நிர்மானங்களை செய்ய நாங்கள் திட்டமிட்டிருந்தோம். இருப்பினும்இ அது தாமதமடைந்திருந்ததுடன் 2021 ஒக்டோபரில் மாத்திரமே நாங்கள் காணி கொள்வனவு கொடுப்பனவிற்காக ரூபா 904.6 மில்லியனை பெற்றிருந்தோம். அதன்படி திட்டமிட்ட பெறுகை சிவில் நிரமான வேலைகள் வருட இறுதியில் தாமதப்படுத்த வேண்டியிருந்தது. | ஒட்டு மொத்த திட்டத்தினையும் கருத்தில் கொண்டுஇ அடையக்கூடிய இலக்குகள் தொகுப்பதற்கு தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கீடுகள் அதனடிப்படையில் வேண்டப்படல் வேண்டும். |

**3. காணி சவிகரிப்புடன் தொடர்புபட்ட விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| மீள்திருத்தப்பட்ட வேலைப்பரப்பு மற்றும் 2015 இல் 193 காணித்துண்டுகளிற்காக வழங்கப்பட்ட பிரிவு 38(அ) என்பனவற்றின் பிரகாரம் 200 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்தும்இ செயற்திட்டமானது 49 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 98 காணித்துண்டுகளை மாத்திரமே கொள்வனவு செய்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீடு ரூபா 2இ534 மில்லியனை செலுத்தியிருந்தது.மேலும் வட்டி ரூபா 775 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 838 மில்லியன் தொகையான இழப்பீடு செயற்திட்டத்தின் நிதிவசதிகளில் குறைபாடு காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாங்கள் 68 துண்டுகளிற்காக கொடுப்பனவு செய்திருந்ததுடன் மற்றைய 30 துண்டுகள் வீதிகள் மற்றும் தனிக்காப்பு நிலமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதன்படிஇ 98 துண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது சீராக்கப்பட்டுள்ளது. இது செயற்திட்டத்தின் மொத்த காணி பகுதியில் 67மூ இனை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |